*40*

# "புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்"

## (16:5-12)

*கலிலேயா கடலைக் கடந்து பெத்சாயிதாவுக்கு போய் சேர்ந்த பின்பு, இயேசு மறுபடியும் தமது சீஷர்களுக்கு போதிக்கத் துவங்கினார்.*

## *இயேசுவின் எச்சரிக்கை (16:5, 6)*

**[5]அவருடைய சீஷர்கள் அக்கரை சேர்ந்தபோது, அப்பங்களைக் கொண்டுவர மறந்து போனார்கள்.**

**[6]இயேசு அவர்களை நோக்கி: பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றார்.**

***வசனம் 5.*** *அடையாளங்களைக் குறித்து பரிசேயரிடத்திலும் சதுசேயரிடத்திலும் விவாதித்தபிறகு, மக்தலாவின் எல்லைகளிலிருந்து* ***சீஷர்கள்*** *படகிலே ஏறி (15:39) கர்த்தரோடு* ***கடலின் அக்கரைக்குப் போனார்கள்.*** *அவர்கள் பெத்சாயிதா ஊருக்கு வந்தார்கள் (மாற்கு 8:22).* ***அப்பங்களை கொண்டு வர மறந்து போனார்கள்.*** *படவில் அவர்களிடத்தில் ஒரு அப்பம்மாத்திரம் இருந்தது (மாற்கு 8:14). சொல்லப்படும் விதத்தைப் பார்க்கும் போது வழக்கமாக தங்களுடைய பயணத்திலே அவர்கள் அப்பங்களை கொண்டு போனார்கள் (10:9, 10 ற்கான விளக்கவுரையைக் காண்க) என்று காட்டுகிறது.*

***வசனம் 6.*** *இயேசு* ***பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்*** *என்று தம்முடைய சீஷர்களிடத்தில் சொன்னார். முன்பு ஒருமுறை இயேசு "புளிப்பின்" தன்மையை ஒரு உவமை மூலமாக, மத்தேயுவில் குறிப்பிட்டு பேசினார் (13:33 க்கான விளக்கவுரையைக் காண்க). புளிப்பைப்பற்றிய உருவகம் தீமையின் பரவுதலைக் குறிக்கும்படி பெரும்பாலும் பேசப்படும் (1 கொரிந்தியர் 5:6-8; கலாத்தியர் 5:7-9). பரிசேயர்களையும் சதுசேயர்களையும் கலிலேயாவிலேயே விட்டு வந்திருந்தபோதிலும், யூதர்கள் மேல் அவர்கள் கொண்டுள்ள எதிர்மறை செல்வாக்கைக் குறித்து இன்னமும் நினைத்துக் கொண்டிருந்தார். இந்தப் பிரிவுகளிலிருந்த உறுப்பினர்கள் தேவனை நம்பாமல் தங்களை நம்பினார்கள். இயேசுவை புறக்கணித்து அவரை அவமானப்படுத்தி அவருடைய அற்புதங்களையும் மட்டுப்படுத்தினார்கள். இதன் விளைவாக, அவர்கள் ஜனங்களுக்கு இடறுதலுக்கேதுவான கல்லாக இருந்தார்கள்.*

*வசனம் 12ல், "புளிப்பு" என்பது பரிசேயர் சதுசேயர் என்பவர்களுடைய "போதனையை" விளக்கப்படுத்துகிறது. லூக்காவில் "புளிப்பு" என்பது "மாய்மாலத்தைக்" குறிக்கிறது (லூக்கா 12:1) யூதர்களின் தலைவர்கள் குறித்த மாய்மாலங்களை இயேசு இன்னும் அதிகக் கவனமாக மற்ற வசனப்பகுதிகளில் விளக்கப்படுத்தியிருக்கிறார். மலைப் பிரசங்கத்தில், இயேசு பரிசேயர்களையும் சதுசேயர்களையும் வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டினார் (மத்தேயு 5:20). "மாய்மாலக்காரராயிருந்த" அவர்களுடைய கொடுத்தல், ஜெபம், உபவாசித்தல் ஆகிய அனைத்துமே மனுஷர்கள் காணும்படி செய்யப்பட்டது (6:1-18) என்று மாற்கு 12:38-40ல் அவர் சொன்னார்,*

> *பின்னும் அவர் உபதேசம் பண்ணுகையில் அவர்களை நோக்கி: நீண்ட அங்கிகளை தரித்துக் கொண்டு திரியவும், சந்தை வெளிகளில் வந்தனங்களை அடையவும், ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் உட்காரவும், விருந்துகளில் முதன்மையான இடங்களில் இருக்கவும் விரும்பி, விதவைகளின் வீடுகளை பட்சித்து, பார்வைக்கு நீண்ட ஜெபம் பண்ணுகிற வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள் என்றார்.*

*மத்தேயு 23:1-7ல் இயேசுவின் வாக்கியங்கள் விசேஷமாக வேதபாரகரோடே, பரிசேயர்களையும் குறிப்பிட்டு, மிகவும் கடுமையாக கடிந்து கொள்கிறார். 23ம் அதிகாரத்தின் பின் பகுதியில், அவர்களுடைய மாய்மாலங்களை தொடர்ந்து வெளிப்படுத்துகிறார் (23:13-15, 23, 25, 27, 29).*

## *சீஷர்களின் தவறான புரிந்து கொள்ளுதல் (16:7-10)*

***[7]நாம் அப்பங்களை கொண்டு வராதபடியால் இப்படிச் சொல்லுகிறார் என்று அவர்கள் தங்களுக்குள்ளே யோசனை பண்ணிக் கொண்டார்கள்.***

***[8]இயேசு அதை அறிந்து; அற்ப விசுவாசிகளே, அப்பங்களைக் கொண்டு வராததைக் குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே யோசனை பண்ணுகிற தென்ன?***

***[9]இன்னும் நீங்கள் உணரவில்லையா? ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்குப் பகிர்ந்ததையும், மீதியானதை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள் என்பதையும்;***

***[10]ஏழு அப்பங்களை நாலாயிரம் பேருக்குப் பகிர்ந்ததையும், மீதியானதை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள் என்பதையும் நீங்கள் நினைவு கூராம லிருக்கிறார்களா?***

***வசனம் 7.*** *சீஷர்கள் இயேசுவின் எச்சரிக்கையைத் தவறாகப் புரிந்து கொண்டார்கள்; அவர்கள்* ***அப்பங்களை*** *கொண்டு வராதபடியால் தங்களைக் கண்டிக்கிறார் என்று நினைத்தார்கள். அவர் இன்னும் அதிகமான ஆவிக்குரியப் பாடங்களை சீஷர்களுக்கு போதிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எண்ணிக் கொண்டிருக்கும்போது, சீஷர்களின் உலகப் பிரகாரமான தடைகள் அவர்களை புரிந்து கொள்ள இடறுதலாக இருந்தன.*

***வசனங்கள் 8-10.*** *அவர்களுடைய தவறான புரிந்து கொள்ளுதல் அவர்*

அவர்களை **அற்ப விசுவாசிகள்** என்று கடிந்து கொள்ளும் சூழ்நிலையை உருவாக்கியது. கர்த்தர் இந்த அடைமொழியாகிய "அற்ப விசுவாசம்" என்பதை அடிக்கடி தமது சீஷர்களுக்குப் பயன்படுத்தினார் (6:30; 8:26; 14:31). "அற்ப விசுவாசம்" விரும்பப்படாதது. ஒருவர் பெரிய விசுவாசத்தைக் கொண்டிருக்க முயற்சிக்க வேண்டும், அது "விசுவாசமில்லாதிருப்பதைக்" காட்டிலும் அல்லது "செத்த விசுவாசத்தைக் காட்டிலும் நிச்சயமாக சிறந்தது" (யாக்கோபு 2:26).

இயேசு தமது கடிந்துகொள்ளுதலை இன்னும் வலிமையாக கேள்வியாகக் கேட்கிறார்: **இன்னும் நீங்கள் உணரவில்லையா அல்லது நினைவில்லையா** ... ? மாற்கு 8:17, 18ல், இந்தக் கேள்விகள் விரிவாகக் கேட்கப்படுகின்றன: "இன்னும் சிந்தியாமலும் உணராமலும் இருக்கிறீர்களா? இன்னும் உங்கள் இருதயம் கடினமாயிருக்கிறதா? உங்களுக்கு கண்களிலிருந்தும் காணாதிருக்கிறீர்களா? காதுகளிருந்தும் கேளாதிருக்கிறீர்களா? நினைவுகூராமலுமிருக்கிறீர்களா ... ?"

இயேசு தாம் நடப்பித்த இரண்டு அற்புதங்களை அவர்களுக்கு நினைப்பூட்டுகிறார்: ஒன்று **ஐயாயிரம் பேரை** போஷித்தல் (14:15-21), மற்றொன்று **நாலாயிரம் பேரை** போஷித்தல் (15:32-39). இந்த அற்புதங்கள் கூடிவந்திருந்த கூட்டத்தை வைத்து மாத்திரமல்ல, பயன்படுத்தப்பட்ட அப்பங்களின் எண்ணிக்கைகளைக் கொண்டும் வேறுபடுத்தப்படுகின்றன (**ஐந்து** மற்றொன்றில் **ஏழு**). இன்னும் அதிகமாகச் சொன்னால், பன்னிரண்டு **கூடைகள்** (*kophinos*) நிறைய எடுக்கப்பட்ட மீதியான துணிக்கைகள் ஏழு **பெரிய கூடைகள்** (*spuris*) நிறைய எடுக்கப்பட்டதும் வித்தியாசப்படுகிறது.

இயேசு அவர்களுக்கு அற்புதங்களை நினைவுபடுத்தினார்; ஆகிலும் மாம்சப் பிரகாரமான போஜனம் மட்டுமே அங்கு குறைவுபட்டிருந்திருக்குமேயாகில், படவில் இருந்த ஒரு அப்பத்தை அவர் பெருகப் பண்ணியிருக்கக் கூடும் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்தவும் செய்தார் (மாற்கு 8:14) அல்லது தேவைப்பட்டிருந்தால் தாமாகவே உண்டு பண்ணி கொடுத்திருக்க முடியும். தமது விவாதத்தின் போது, இயேசு இன்னும் பெரிதான அதிக முக்கியத்துவம் நிறைந்த பாடத்தை கற்க வழி காட்டுகிறார். அவர்கள் தங்கள் மாமிச தேவைகளில் அக்கறையுள்ளவர்களாயிருந்தனர். அதற்குத்தான் அவர் தேவனிடத்தில் விசுவாசம் வைக்கும்படி கட்டளையிட்டார். உண்மையான முக்கியத்துவத்தைக் குறித்த பார்வை அவர்களுக்கு இல்லாமல் போயிற்று, அது தேவனிடத்திலிருந்து வருகிற உண்மையான உபதேசம் (காண்க 6:33).[1]

## இயேசுவின் எச்சரிக்கை மீண்டும் கொடுக்கப்படுதல் (16:11, 12)

***11பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவுக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று நான் சொன்னது அப்பத்தைக் குறித்துச் சொல்லவில்லை என்று நீங்கள் உணராதிருக்கிறது எப்படி? என்றார்.***

***12அப்பொழுது, அவர் அப்பத்தின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டுமென்று சொல்லாமல், பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் உபதேசத்தைக் குறித்தே அப்படிச் சொன்னார் என்று அறிந்து கொண்டார்கள்.***

***வசனங்கள் 11, 12.*** *பிறகு அவர், **நான் சொன்னது அப்பத்தைக் குறித்துச் சொல்லவில்லை என்று நீங்கள் உணராதிருக்கிறது எப்படி?** என்று கேட்டார். தாம் சொன்ன கருத்தை சீஷர்கள் புரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படி, இயேசு மறுபடியும் **பரிசேயர் சதுசேயராகிய புளிப்பைப் குறித்து எச்சரித்தார்.** இந்த நேரத்தில்தான் அவர்கள் அந்தபிரிவினரின் உபதேசத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படி அவர் சொல்லுகிறார் என்பதை உணர்ந்து கொண்டார்கள் (16:1, 6ன் விளக்கவுரையைக் காண்க). பரிசேயர்களின் (சுய) சட்டங்கள் மற்றும் சதுசேயரின் அச்சுறுத்தல்கள் மூலம் கொண்டிருந்த பணக்கொள்ளை ஆகிய இரு தீமைகளைக் கொண்டு ஒருபோதும் நீதியை அடைய முடியாது.[2] இதற்கு ஒப்பான மாற்கு எழுதின வசனங்களில் சதுசேயர்களுக்குப் பதிலாக ஏரோது என்று குறிப்பிட்டுள்ளார் (மாற்கு 8:15). அடையாளம் கேட்டு வந்த இவரும் சதுசேயர்களைப் போல இயேசுவை புறந்தள்ளினர் (லூக்கா 23:8-12).*

---

*குறிப்புகள்*

[1]Donald A. Hagner, *Matthew 14-28*, Word Biblical Commentary, vol. 33B (Dallas: Word Books, 1995), 460. [2]Robert H. Mounce, *Matthew*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 159.